# கி. பாகிஸ்தான் பற்றி சுவர்ண்சிங் பிரதமருடன் பேசுவார்?

Registered as a News Paper in Ceylon விலை சதம 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தேசிய தினசரி

மலர் 13 இதழ் 211

25 றஜப் 19 வெள்ளிக்கிழமை (10-9-71)

கொழும்பு, வியாழன் இந்திய வெளிநாட்டமைச்சர் திரு சர்தார் சுவர்ண்சிங் இன்று மாலை இலங்கைவந்து சேர்ந்தார். பிரதமர் ஸ்ரீமாவோவின் அழைப்பின்பேரில் இலங்கை வந்திருக்கும் திரு சுவர்ண்சிங் இங்கு மூன்று நாட்கள் தங்கியிருந்து பிரதமருடனும் மற்றும் தலைவர்களுடனும் இலங்கை இந்திய வர்த்தகம், பொருளாதார ஒத்துழைப்பு ஆகியவைபற்றி பேச்சுவார்த்தை நடத்துவதுடன், ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்த அமுலின் முன்னேற்றம் பற்றியும் ஆராய்வார்.

இவற்றோடு இந்திய சோவியத் ஒப்பந்தம் உட்பட தற்போதைய அரசியல் முன்னேற்றத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றியும், வங்காள தேசப் [illegible]னை பற்றியும் ஆராய்வார்கள் என அறியப்படுகிறது. இவர்களுடைய பேச்சுவார்த்தையில் இந்திய சோவியத் ஒப்பந்தம் [illegible] பக்கம் பார்க்க]



# சூ-என்-லா[illegible]லசீன தூதுக்குழு இலங்கைவரும்?

## அடுத்தமாதம் இங்கு பேச்சு நடைபெறலாம்

கொழும்பு, வியாழன் கம்யூனிஸ்ட் சீன உயர்நிர தூதுகோஷ்டி ஒன்று அடுத்தமாதம் இலங்கை வரலாம் என ராஜதந்திர வட்டாரங்களில் பேசப்படுகிறது. இந்தத் தூது கோஷ்டிக்கு சீனப் பிரதமர் சூ-என்-லாயே தலைமைதாங்கி வரவும் கூடும் என்றும் சொல்லப்படுகிறது.

ஆனால் இந்தத் தகவல்களை இலங்கை வெளிநாட்டமைச்சு ஊர்ஜிதம் செய்யவுமில்லை மறுக்கவுமில்லை.

சீனப்பிரதமர் சூ-என்-[illegible]வும் இருவருக்கும் விஜயம்செய்துவைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் சீனப் பிரச்னை காரணமாக விஜயம் தடைப்பட்டதாகவும்

(5ம் பக்கம் பார்க்க)



இன்று நடனம் ஆடுகிறார்



"கைவழி நயனம்செல்ல" என்பார்கள். இங்கே இந்த ஆடலழகியின் நயனம் கால்நுனிப் பெருவிரல் வரை செல்கிறது. நாட்டிய கலாமேசரி வழுவூர் பி. இராமையாவின் பிரதம சிஷ்யைகளில் ஒருவரான செல்வி மாலதி தர்மாவின் ஆட்டங்களில் ஒன்றுதான் இந்த அற்புதக் காட்சி. சென்ற வருடம் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் வழுவூரார் நட்டுவாங்கம் செய்ய செல்வி மாலதியின் அரங்கேற்றம் சிறப்பாக நடந்தேறியது. இன்று வெள்ளிக்கிழமை மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மாலதியின் நடன நிகழ்ச்சி [illegible] நகர் சிவன் கோவில் திருத்த மண்டப நிதிக்காக நடைபெறுகிறது. சென்ற வருடம் டிசம்பர் மாதம் சென்னை தமிழ் இசைச் சங்கத்தினரின் ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடந்த இசைவிருந்தில் இடம் பெற்ற நாட்டிய நாடகத்தில் முன்னணியில் திகழ்ந்து இந்திய விமரிசகர்களால் பெரிதும் பாராட்டப் பெற்றார். வழக்காறிலும் இராமநாதன் இசைக் கழகத்தின் தலைவருமான திரு. எஸ். ஆர். கனகநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இன்றைய நிகழ்ச்சியில் பதம், வர்ணம், தில்லானா ஆகியவைகளுடன் ஜனரஞ்சகமான பாம்பு நடனம், குறத்தி நடனம் ஆகியவைகளும் இடம் பெறும். இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தது போன்று கவனச் சத்தத்தைப் பிரதிபலிக்கும் ஒரு லயத்துக்கு அமிக்கும் சப்தம் வினைகுமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

இந்நடனத்தை பார்த்தபின் ரசிகர்கள் தங்கள் வீடுகள் செல்வதற்கு விசேட பஸ் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

### இன்று

வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலயத்தில் சுக்கிர வாரமாகிய இன்று மாலை 6 மணி முதல் 7 மணிவரை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் திரு சணபதிப்பிள்ளை சொற்பொழிவாற்றுவார். மாலை 5-45 சுக்கிரவார பூசையும் இரவு 7 மணிக்கு சாத்திரை உற்சவமும் நிகழும்

## சீதனம் கேட்டார் காதலன்; இளம் பெண் தற்கொலை

யாழ்ப்பாணம், வெள்ளி தாம் காதலித்த தமது காதலன் சீதனம் கேட்டு விவாகம்செய்ய மறுத்ததைத் தாங்கமுடியாத ஒரு இளம் பெண் தமக்குத் தானே மண்ணெண்ணை ஊற்றித் தீமூட்டி தற்கொலை செய்து கொண்ட சம்பவமொன்று நேற்று முன்தினம் பரந்தனில் நடைபெற்றது.

சின்னத்தம்பி விஜயலெட்சுமி (வயது 19) என்பாரின் மரணவிசாரணையின் போது இது தெரியவந்தது.

கண்டிக்குளியைச் சேர்ந்த குமாரகுலசிங்கம் என்பவர் மரணமான விஜயலெட்சுமியைக் காதலித்துவந்தாக

## பயங்கர இயக்கத்துக்கு டட்லியே காரணம் -மைத்திரி

கொழும்பு, வியாழன் நாட்டில் நடைபெற்ற கலவரங்களுக்கு யாராவது பொறுப்பாளியாக இருக்க வேண்டுமேயானால் அது முன்னைநாள் பிரதமர் டட்லி சேனநாயக்காவாகத்தான் இருக்கமுடியும் என்று இன்று இடைக்கால பட்ஜெட் மீது நடைபெற்ற விவாதத்தின் போது சபை முதல்வர் திரு மைத்திரிபால சேனநாயக்கா ஒரு சந்தர்ப்பத்தில் டட்லியைப் பார்த்துக் கூறினார்

அவர் மேலும் பேசுகையில் 1968ம் ஆண்டு இன்ஸ்பெக்டர் ஜெனரலாகஇருந்த சேபால ஆட்டிகல அரசாங்கத்திற்கு அளித்த மூன்று விதமான அறிக்கைகளில் இயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் பற்றி தெரிவிக்கப்பட்டிருந்தன. அந்த அறிக்கையை தேசிய அரசாங்கம் பதவியிலிருந்து விலகிய பின்புங்கூட அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படவில்லை அதுமாத்திரமல்ல மறைத்துவிட்டது அந்த அறிக்கைபற்றி தனது அமைச்சர்களுக்குக்கூட டட்லி தெரிவிக்கவில்லை அதுவிஷயமாக உடனடி நடவடிக்கையும் எடுக்கவில்லை ஐ.தே.கட்சி திரும்ப ஆட்சிக்குவந்தால் மறுநாளே பயங்கர இயக்கத்தை ஆரம்பிப்பதெனவும் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தால் சிறிதுகாலம்பொறுத்து அவ்வியக்கத்தை ஆரம்பிப்பதெனவும் பயங்கரவாதிகள் திட்டமிட்ட செய்தி பற்றி அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது பயங்கரவாத இயக்கத்தின் பொழுது பிரதமர் ஸ்ரீமாவோ உடனடி நட

(5-ம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்

திருமதி பாக்கியம் - ஏகாம்பரம்

கன்னாகம் விக்தவரோதயக்கல்லூரி அதிபர் ப. ஏகாம்பரம் அவர்களின் அருமை மனைவியாரும், செல்விகள் சாந்தினி, சிவாஜினி, செல்வன் சூரியகுமாரன் ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆகிய திருமதி பாக்கியம் ஏகாம்பரம் அவர்கள் காலமாகிவிட்டார் 10-9-71 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி அளவில் புலோலி தெற்கு 'பதமகிரி' இல்லத்திலிருந்து அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக 'ஆனைவிழுந்தான்' மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

அறிவிப்பவர்; ப. ஏகாம்பரம்.

8657

## வரி விளம்பரம்

கலம் பெறுமதியானது. ஒரு லைக்கட் மிக்கலைற் வைப்பவுடரின் அநேக துணைகளை சலவைசெய்ய லாம் வெற்றுறை ஒன்றை அனுப்பி வெளியீட்டுப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள் மிக்கலைற் சோப் தொழிற்சாலை. யாழ்ப்பாணம். 3520

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெஷின் கொம்பனி. 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3524

## விற்பனைக்கு

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு ஐந்தாம் வகுப்பு மாணவர் தேர்ச்சிக்கு புதுமுறை மாதிரி வினாக்கள் கணிதம்-75 சதம். தமிழ்-75சதம் ஆங்கிலம்-75 சதம். சூழல்-75 சதம். விவேகானந்த சபைப் பரீட்சைக்கும் அமைவான சைவசமய பாட மாதிரி வினாக்கள் 95 சதம். ஸ்ரீகாந்தா அச்சகம்—புத்தகசாலை, யாழ்ப்பாணம். 3551

ஹோண்டா ஸ்பெஷல் 3ஸ்ரீ 7903 கார் ஒரே சொந்தக்காரர். ஸ்ராண்டட் (ஒறிஜினல்) பிஸ்ரன்; விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க- ராஜா மில் நிலையம், கொக்குவில். 3549

## விற்பனைக்கு

25 பரப்பு நன்றாக விளையும் தோட்டக்காணி, கடையன் பிட்டி விடத்தற்பளை, உசனில் குளத்திற்கு அருகாமையில் விற்பனைக்கு உண்டு. வாங்குபவர் த. கணேசன் திருவடி நிழல். ஆராலி வடக்கு வட்டுக்கோட்டை, எனும் விலாசத்திற்கு எழுதலுக்கு முன் தொடர்பு கொள்ளவும். 3560

அபிஷேகத்திரவியங்கள் கோவில் கும்பாபிஷேகம், சங்காபிஷேகம், திருவிழாக்கள் யாவற்றுக்கும் வேண்டிய பொருட்கள் சிறந்த முறையில் மலிவாகக்கிடைக்குமிடம்- எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, மருந்து, மருந்துச்சரக்கு வியாபாரம் காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் 3523

யாழ்ப்பாணம் (கச்சேரி நல்லூர் றோட்) சிவிலா தெருவில் (வாட் நம். 6) உள்ள காணியொன்று (4 பரப்பும் 5 குளியும்) விற்பனைக்குண்டு. இக்காணிக்குக் கொடுக்கக்கூடிய ஆகக்கூடிய விலையைக் குறிப்பிட்டு கீழ்க்காணும் முகவரிக்குத் தபால் மூலம் தொடர்புகொள்க. சாமுவேல் பெனடிக்ற், ஆசிரியர் ஜகிந்தா லொட்ஜ், பண்டத்தரிப்பு. 3563

## விஸ்தரிப்பு

அரியாலை, வியா

செம்மணி உப்பளம் விரைவில் விஸ்தரிக்கப்படவுள்ளது. 100 ஏக்கர் விஸ்தீரண முடைய இவ் உப்பளம் 124 ஏக்கராக விஸ்தரிக்கப் படவிருக்கிறது.

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p. m.
Sat. Sundays 10-30
Jeanne Moreau
in
THE BRIDE WORE BLACK
(color)

தினசரி பி.ப. 2-00 9-45
ஏ. பி. நாகராஜன்—
ஜி. வரலக்ஷ்மி
நடித்த
ஏழு பிள்ளை
நல்லதங்காள்
புதிய கொப்பி

வெலிங்டன்-ஸ்லிசினிமா... 

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
பி ப 2-30, 6-30, 10-00
8 – 12
எம். ஜி. ஆர். - பத்மினி
ராணி சம்யுக்தா

13—
சிவாஜி - கே. ஆர். விஜயா
ஊட்டிவரை
உறவு

## தேவை

சகல வசதிகளுடன் உள்ள அச்சகம் (Press விலைக்கு தேவை. பொருட்களின் பட்டியல், விலை முதலிய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 3566, C/o ஈழநாடு லிமிடெட், யாழ்ப்பாணம். 3566

வைத்திய தாதி சேவை வேலையில் அனுபவமுள்ள பெண் ஆசிரியை ஒருவர் உடனே தேவை. தாதி சேவை வேலையுடன் கைவேலை அனுபவமும், தாதிச்சாலையை நடத்தும் திறமையும் உள்ளவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் 14-9-71க்கு முன் அனுப்புதல் வேண்டும். Cytex (Ceylon) 92 Colombogam Road. Jaffna. 3559

பௌதிகம், இரசாயனம், உயிரியல், பிரயோககணிதம் ஆகிய பாடங்கள் க.பொ.த (சாதாரண) வகுப்புகளுக்கு கற்பிக்க ஆசிரியர்கள் தேவை. தராதரப்பத்திரப் பிரதிகளுடன் உடன் விண்ணப்பிக்கவும். (ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்). விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி: கலைவாணி கல்வி நிலையம், சுதிரிப்பாய், அச்சுவேலி 3562

## மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி நீர்வேலி ஸ்ரீலஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஞானகார்த்திக நாற்சிலையத்தின் 15வது ஆண்டு விழாவையொட்டி இம்மாதம் 19ம் திகதி மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியொன்று நடைபெறவிருக்கிறது. அன்றுபிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி முற்றவெளி மைதானத்தில் நடைபெறும். இப்போட்டி அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் திரு க. இராசரத்தினம் தலைமையில் ஆரம்பமாகும்.

சாய்ந்தமருது, விசா தமிழரசுக் கட்சித்தலைவர்களில் ஒருவரான டாக்டர் ஈ எம் வி நாகநாதனின் மறைவு குறித்த கல்முனை சோனேச மீன்பிடிச் சங்கம் அன்னாரின் குடும்பத்தினர்க்கு ஓர் அனுதாபச் செய்தியை அனுப்பியுள்ளது

நாகமஸ்சினிமா
கல்முனை
தினசரி: 4 30
சனி, ஞாயிறு 10-30
THIEF OF SAMARKAN
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2 30
பாலச்சந்தர்-ரேவதி
நடித்த
கைதி
[புதிய கொப்பி]

## சாவகச்சேரி நகரசபை கேள்விப்பத்திர விளம்பரம்

கீழே விபரிக்கப்படும் வேலைகள் செய்து முடிப்பதற்கு இந்நகரசபையில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

வேலைகள்

1. 1-ம், 3-ம் வட்டாரத்திலுள்ள வைரெல்லைத்தெருவான பனையடிக்குள ஒழுங்கைத் திருத்தம்.

2. 4-ம் வட்டாரத்திலுள்ள இராமலிங்கம் வீதி திருத்தம்.

3. பஸ் நிலையம், பஸ் நிலைய வீதி, சந்தை தெற்கு வீதி, திருத்தம்.

கேள்விப்பத்திரங்கள் 16-9-71-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை இந்நகரசபை அலுவலகத்தில் அதற்கான வைப்புப் பணத்தையும் கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரம் கவிந்த உறைக்குள் வைக்கப்பட்டு உறையின் மேற்பக்கத்தில் இடதுபுறமாக வேலைக்குரிய பெயரை எழுதி, தலைவர் நகரசபை சாவகச்சேரி என விலாசமிட்டு உறைக்கு மெழுகு போட்டு, அடையாளம் வைத்து 1971-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 17-ந் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் இந்நகரசபை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப்பெட்டிக்குள் போட வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். இதைப்பற்றிய விதிகளும் இன்னும் விபரங்களும் அறியவேண்டின் சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

க. கனகரத்தினம்
தலைவர்
நகரசபை, சாவகச்சேரி.
நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
7-9-71 3015

## கேள்வி விளம்பரம்

சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் வெற்றுச்சாக்குகள், பழம் வெறி ரயர்கள், உதிரிப்பாகங்கள் டெண்டர் மூலம் விற்பனை செய்யப் பெறும். விண்ணப்ப முடிவுத் திகதி 16-9--71. பிற விபரங்களுக்கு சங்கத்துடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

பொதுமுகாமையாளர்
சங்கானை ப. நே. கூ. ச,
3016 சங்கானை.

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30 6 30 10-0 சனி, ஞாயிறு 10-30
ஜெமினி சரோஜாதேவி
ரவிச்சந்திரன்—பாரதி நடித்த
# சிநேகிதி

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை10-30,பி.ப.2-30,மாலை6-30இரவு10மணி
பின்னணிப் பாடகர்கள்
★ ரி. எம். சௌந்தரராஜன்
★ ஏ. எல். ராகவன்
ராஜ்ஸ்ரீ — விஜயகுமாரி — நாகேஷ்
நடித்த
# கல்லும் கனியாகும்

வின்சர் [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
★ ஜெமினிகணேசன்
★ கே. ஆர். விஜயா
நாகேஷ், பி. எஸ். வீரப்பா, நிர்மலா
நடித்த
# சங்கமம்

4-வது ஜனத்திரள் வாரம்

வெலிங்டன் (யாழ் நகர்)
பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00 மணி.

லிடோ (யாழ்.நகர்)
(காலை 10-30 மட்டும்)

மற்றும்
கெப்பிற்றல்—பிளாஸா
திரைகளில்



நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்
(3 வேடங்களில்)
ஜெயலலிதா
நாகேஷ், நம்பியார், சுந்தரராஜன்
நடித்த
# தெய்வ மகன்

லிடோ [யாழ்நகர்]
தினசரி பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30.
திலீப்குமார் - வைஜயந்திமாலா
நடித்த
# மதுமதி
(ஹிந்திச் சித்திரம்)

இன்று குதூகல ஆரம்பம்!

ராணி சினிமா– [யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள், சனி ஞாயிறு 4 காட்சிகள்
★ ஜெமினி கணேசன்
★ ரவிச்சந்திரன்
★ பாரதி ★ சரோஜாதேவி
நடித்த
# சிநேகிதி

# யாஹ்யா - பூட்டோ பேச்சு நடைபெறவில்லை

புதுடில்லி, செப். 9 பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாஹ்யாகானுக்கும், மேற்குப் பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் திரு. சுல்பிகார் அலி பூட்டோவுக்கும் இடையில் இன்று நடைபெற இருந்த பேச்சுக்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

மேற்குப் பாகிஸ்தானில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களிடம் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைக்கும்படி யாஹ்யாகானை திரு. பூட்டோ வலியுறுத்தி வருகிருர். இன்று நடைபெறவிருந்த பேச்சுக்கள் இறுதியானவையாக இருக்குமென்று முன்பு எதிர்பார்க்கப்பட்டது.

இந்தப் பேச்சுக்களால் ஏதும் பயன் ஏற்பட்டால் அல்லாமல் இதுவே யாஹ்யாகானுடன் தாம் நடத்தப் போகும் இறுதிப்பேச்சாக இருக்குமென்று திரு. பூட்டோ ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இந்தப் பேச்சுக்களும் தோல்வியடைந்தால் கிழக்குப் பாகிஸ்தானைப் போல் மேற்கிலும் பூசல்கள் வெடிக்கக்கூடுமென்று அவதானிகள் கருதினார்கள்.

இன்று நடைபெறவிருந்த பேச்சுக்கள் ரத்துச்செய்யப்பட்டதற்கு ஆட்சித்தரப்பில் எதுவித காரணமும் அறிவிக்கப்படவில்லை. ஆனால் திரு. பூட்டோவுக்கு சுகவீனம் என்றும் இஸ்லாமாபாத்துக்குப் போகக்கூடிய நிலையில் அவர் இல்லையென்றும் மக்கள்கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

## பொது மன்னிப்பு கண்துடைப்பு?

கிழக்குப் பாகிஸ்தானில் கலவரங்களில் ஈடுபட்டவர்களுக்குப் பொது மன்னிப்பு அளிப்பதாக ஜெனரல் யாஹ்யாகான் அறிவித்திருந்தது வெறும் கண்துடைப்புதான் என்பது இப்பொழுது உறுதியாகிவருவதாக வங்காள தேசப் பிரமுகர் ஒருவர் தெரிவித்திருக்கிருர்.

இதுவரை மறைவாக இருந்துவிட்டு வெளிவரும் பொதுமக்களையும் வாலிபர்களையும் இராணுவத்தினர் தீர்த்துக்கட்டுவதில் ஈடுபட்டுக்கிருர்கள்.

டாக்கா நகர் முற்றாகவே 'சீல்' வைக்கப்பட்டிருக்கிறதாம். நகரைச் சுற்றி இராணுவத்தினர் காவல்புரிவதாகக் கூறப்படுகின்றது.

வெளி நாடுகளிலுள்ள பாக் தூதரக ஊழியர்கள் அனைவரும் தங்கள் மேலதிகாரியிடம் தமது பாஸ்போர்ட்டுக்களை கையளித்துவிடவேண்டுமென யாஹ்யாகான் விடுத்த உத்தரவுகளை லண்டனிலுள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளான ஊழியர்கள் மீறிவிட்டார்களாம். பாஸ்போர்ட்டுக்களைக் கையளித்துவிடுவதற்கான காலக்கெடு செவ்வாய்க்கிழமையோடு முடிவடைந்தது. ஆனால் லண்டன் தூதரக அதிகாரிகள் இன்னமும் தமது பாஸ்போர்ட்டுக்களைக் கையளிக்கவில்லையாம்.

### விமான அத்துமீறல்

காஷ்மீரில் இந்தியப் பிராந்தியத்திற்குள் மூன்று பாகிஸ்தான் விமானங்கள் அத்துமீறிப் பறந்ததாக இந்திய அரசாங்கம் பாகிஸ்தானிடம் கடுமையான ஆட்சேபம் தெரிவித்திருக்கின்றது.

கடந்த திங்கட்கிழமை அன்று இந்த விமானங்கள் இந்தியப் பிராந்தியத்தைக் கடந்து செல்ல முயன்றதாகவும், இந்திய இராணுவத்தினர் இதைக் கண்டுபிடித்துவிட்டதால் அவை பின்வாங்கி ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## பிரி. தூதுவர் விடுதலையாவார்

மொன்டிவிடியோ, செப். 9 உருகுவே நாட்டின் 'துப்பமாரோஸ்' தீவிரவாதிகள் கடத்திச்சென்று தலைமறைவாய் வைத்திருக்கும் பிரிட்டிஷ் தூதுவரை விடுதலைசெய்யப் போவதாக அவர்களே அறிவித்துள்ளனர்.

ஒலிம்பிக

## குதிரையோட்டப் போட்டியில் இளவரசியும்பங்குபற்றுவார்

லண்டன், செப். 9 அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் விளையாட்டுக்களில் பங்குபற்றும் பிரிட்டிஷ் கோஷ்டியில் இளவரசி ஆனும் இருப்பார் என்பது உறுதியாகி வருகிறது.

ஒலிம்பிக் குதிரையோட்டப் போட்டியில் பங்குபற்றக் கூடிய தகுதியை அவர் இப்போது பெற்றிருக்கிருர்.

நோர்தாண்ட்ஸ், பேர்க்லியில் மூன்று நாட்கள் நடந்த ஐரோப்பிய ஈகுவெஸ்டிரியன் சம்பியன் போட்டியில் எட்டுநாடுகளைச் சேர்ந்த குதிரையோட்ட வீரர்களை ஆன் வென்றிருந்தார். பாட்மின்டனில் இவ்வருடம் நடந்த மற்றொரு போட்டியில் அவர் ஐந்தாவதாக வந்ததினாலேயே அவருக்கு பேர்க்லியில் 'ரவி' விருது கிடைத்தது.

பேர்க்லியில் அவர் தனது சொந்தக்குதிரையான 'டப்லெட்'டில் பாய்ச்சலோட்டத்தில் பங்குபற்றி எல்லோரதும் ஏகோபித்த பாராட்டைப் பெற்றிருந்தார்.

## 20 தமிழ் படங்கள் பர்மா இறக்குமதி செய்யும்

சென்னை செப் 9 தமிழ்நாட்டிலிருந்து 20 தமிழ் திரைப்படங்களை பர்மா இறக்குமதி செய்யவிருக்கிறது. இத்தகவலை இந்திய திரைப்பட ஏற்றுமதி கார்ப்பரேஷன் இயக்குநர் திரு ஏ. எல். சீனிவாசன் சென்னையில் தெரிவித்தார். இதற்கான பேச்சுவார்த்தைகள் சில நாட்களுக்கு முன்நடைபெற்றதாம்.

இதே நேரத்தில் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட 3 இந்திப் படங்கள் உட்பட 18 இந்திப் படங்களையும் இறக்குமதி செய்ய பர்மா முடிவுசெய்திருப்பதாகவும் தெரிகிறது.

## முத்தரப்புபேச்சில்ஜரிஷ் பிரதமர் கலந்து கொள்வார்

லண்டன், செப 9 பிரிட்டிஷ் பிரதமர் ஹீத், வடஅயர்லாந்து பிரதமர் ஆகியவர்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது பற்றித் தாம் ஆலோசிக்கப் போவதாக ஐரிஷ் குடியரசுப் பிரதமர் திரு. லிஞ்ச் தெரிவித்திருக்கிறார்.

வடஅயர்லாந்து பிரச்சினை பற்றி பிரிட்டிஷ் பிரதமர் ஹீத்துடன் அவர் ஏற்கனவே நடத்திய பேச்சுக்கள் தோல்வியில் முடிந்ததாகச் செய்திகள் கூறுகின்றன.

வடஅயர்லாந்து பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்ற ஐரிஷ் குடியரசுப் பிரதமர் தெரிவித்த யோசனைகளைப் பிரிட்டிஷ் பிரதமர் நிராகரித்துவிட்டதாகக் கூறப்படுகின்றது.

பிரிட்டிஷ் உள்நாட்டு அமைச்சர் திரு. மோட்லிங் லண்டனில் எல்லா தரப்பு பிரமுகர்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டும் என்றும் வடஅயர்லாந்து தலைவர்களுடன் ஆலோசனை நடத்த வேண்டும் என்றும் ஏற்பட்டதீர்மானம் மாத்திரமே இரு பிரதமர்களும் ஏற்கனவே நடத்திய பேச்சுக்களினால் ஏற்பட்ட பயன் என்று கூறப்படுகின்றது. வடஅயர்லாந்து பிரதமர், பிரிட்டிஷ் பிரதமர் ஆகியவர்களுடன் தாம் நடத்தும் பேச்சுக்களில் வடஅயர்லாந்து எதிர்க்கட்சித் தலைவர்களும் கலந்துகொள்ள வசதி செய்யப்படவேண்டும் என்றும் திரு. லிஞ்ச் யோசனை தெரிவித்திருக்கிருர்.

வடஅயர்லாந்து பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்று தாம் தெரிவித்த யோசனை ஏற்கப்படாமல் போனது குறித்து திரு. லிஞ்ச் கவலை கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

## அமைதிகாண புதியமுயற்சி

வடஅயர்லாந்து நிலைமையைச் சீராக்குவதற்குப் புதிய முயற்சிகள் இப்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளன. வட அயர்லாந்தின் பொதுவாழ்வில் சிறுபான்மைச் சமூகத்தினர் வகிக்கும் பங்கை மேலும் சீராக்குவதற்கு வழிகாணு முகமாக அம்மாகாணத்தின் சகல சமூகங்களையும் பேச்சுவார்த்தையில் ஈடுபடவைப்பதே இப்புதிய முயற்சிகளாகும். இம்முயற்சிகளின் விபரம் செவ்வாய்க்கிழமை லண்டனில் உள்நாட்டமைச்சர் திரு றெஜினல்ட் மோட்லிங்கால் அறிவிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் வடஅயர்லாந்து அரசாங்கத்துடனும் வடஅயர்லாந்து பாராளுமன்றத்தின் இருதரப்புப் பிரதிநிதிகளுடனும் பெரும்பான்மை சிறுபான்மை சமூகங்களுடனும் அமைச்சர் பேச்சுவார்த்தைகள் நடத்துவார். இதற்கான ஆயத்தங்களை அமைச்சரே செய்து வருகிருர். சிறுபான்மையினர் பெரும்பான்மையினர் ஆகிய இருதரப்பாரின் பிரதிநிதிகளும் மாகாணத்தின் பொதுவிவகாரங்களில் ஆக்கபூர்வமான நிரந்தரமான உத்தரவாதமுள்ள பங்கை வகிக்க வழிகாணுவதே உள்நாட்டமைச்சரின் நோக்கமாகும்.

பிரிட்டிஷ் பிரதமர் திரு ஹீத்தும், ஐரிஷ் குடியரசுப் பிரதமர் திரு லிஞ்சும் நடத்திய பேச்சுக்கள் முடிவடைந்த சிலமணி நேரத்தில் இந்த புதிய நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டன. ஆகஸ்ட் 4ந் திகதி லண்டனில், வடஅயர்லாந்து பிரதமர் திரு போக்னர் கலந்து கொண்ட ஒரு மாநாட்டை அடுத்து பிரிட்டிஷ் அரசாங்கமும் மாகாண

[3-ம் கலம் பார்க்க]

உத்தர பிரதேசத்தில்

## வெள்ளத்துக்கு 300 பேர் பலி

புதுடில்லி, செப் 9 இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் இதுவரை வெள்ளப் பெருக்கினல் 300 பேர் உயிர் துறந்துள்ளார்கள்.

மேற்கு வங்காளத்தில் நேற்று பிரயாணிகள் படகு ஒன்று கவிழ்ந்ததால் 74பேர் பலியாஞர்கள்.

லக்னோவில் வெள்ள நிலைமை இன்னும் தணியவில்லை. கோமதி ஆறு அபாய அளவை மீறிப்பாய்ந்துகொண்டிருக்கிறது. நேற்று ஆற்றின் நீர்மட்டம் ஏறவுமில்லை இறங்கவுமில்லையென்று அதிகாரிகள் கூறினார்கள்: அபாய அளவுக்கு ஆறு அடிமேலே வெள்ளம் பாய்ந்ததாக அவர்கள் கூறினர்.

உத்தரப்பிரதேசத்தின் தலைநகர் லக்னோ வெள்ளத்தில் மூழ்கிக்கிடப்பதாக அவதானிகள் கூறுகின்றனர்.

குஜராத்தில் நர்மதா நதியில் நேற்று அபாய அளவுக்குமேலே வெள்ளம் பாய்ந்தது. பீகாரில் பும்புன் ஆற்றிலும் வெள்ளம் சீறிப்பாய்ந்துகொண்டிருக்கிறது.

---

புதுடில்லி, செப் 9 கிழக்குஜெர்மனியும் இந்தியாவும் நட்புறவு கலாச்சார ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொண்டுள்ளன.

## வைத்திய முதல் உதவிக்காட்சி

யாழ்ப்பாணம், வியாழன் கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையில் இம்மாதம் 19-ம் திகதி காலை பொதுமக்களின் பார்வைக்காக முதல் உதவிக் கண்காட்சி திறந்துவைக்கப்படும். 20 ம் திகதி காலை பாடசாலைப்பிள்ளைகளுக்காகப் பயிற்சியும் காட்சியும் காண்பிக்கப்படும்.

வைத்திய முதல் உதவிக் காட்சி பெரியோருக்கும் பள்ளிப்பிள்ளைகளுக்கும்பெரிதும் பயன்படும் விதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கண்காட்சியில் மனித உடலின் பகுதிகள் மூச்சடைப்பும்செயற்கைச் சுவாச முறைகளும் பாம்புக்கடியும் முதல் உதவியும், எலும்பு முறிவு, எடையும் உயரமும், விஷம், போன்ற பல்வேறு அம்சங்கள் இடம்பெறும்.

## அடைக்கல மாதா திருநாள்

பூநகரி, வியாழன் பூநகரி பரிசுத்த அடைக்கல மாதாவின் ஆலய உற்சவம் 5-ந் திகதி தொடங்கி 8-ம் திகதிவரை நடைபெற்றது. யாழ். வண. ஆயரின் திவ்விய பூசைப் பலியும் உறுதிபூசுதல், முதல் நன்மை ஆசிர்வாதமும் நிறைவேற்றப்பட்டன. பங்குக்குருவானவர் வண. பிதா தேவராசா தலைமையில் திருச்சொரூபசுற்றுப்பிரகாரமும் நடைபெற்றது.

## ஜோர்டான் விமானம் திசைதிருப்பப்பட்டது

பெங்காஸி, செப். 9 ஜோர்டான் விமானமொன்றை பாலஸ்தீன விடுதலை இயக்க கொரில்லா வீரர் ஒருவர் திசைதிருப்பி லிபியாவுக்குக் கொண்டுசென்றுர்.

பேருட்டிலிருந்து அம்மான் நோக்கிப் போய்க்கொண்டிருந்த இந்த விமானத்தின் விமானியை கைக்குண்டொன்றைக் காட்டி பெங்காஸிக்கு கொண்டுசெல்லும்படி பயமுறுத்தினாராம்.

பெங்காஸியிலிறங்கியதும் கொரில்லாவீரர் சிறைப்பிடிக்கப்பட்டார். விமானத்திலிருந்த 57 விமானிகளும் பின் அதே விமானத்தில் அம்மானுக்குப்புறப்பட்டதாகத் தெரிகின்றது.

## நிதி உதவி

சாய்ந்தமருது, வியா பலாத்காரவாதிகளினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்திற்காக அரசாங்கம் திரட்டும் நிதிக்கு கல்முனை சலுசலா ஊழியர்களும் வாடிக்கையாளர்களும் சேர்ந்து நானூறு ரூபாய் சேகரித்து மேற்படி சலுசலா முகாமையாளரிடம் கையளித்துள்ளனர்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

அரசாங்கமும் தொடர்ந்து நடத்திய பேச்சுக்களின் விளைவே இப்புதிய நடவடிக்கைகளென்றும் அறிவிக்கப்படுகிறது.

## காவடியுடன் தீக்குளித்தார்

மாவிட்டபுரம், வியா

காவடியைத் தோளில் சுமந்தவண்ணம் தீயிலிறங்கி பக்திபரவசமாகத் தீக்குளித்தார் பக்தர் ஒருவர். கோண்டாவில் மேற்குப் பிள்ளையார் ஞானவைரவர் கோவில் தீர்த்த உற்சவத்தன்று இத்தீக்குளிப்பு நடைபெற்றது. கோண்டாவில் வாசியான எம். அற்புதம் என்பவர் தாவடி முனியப்பர் ஆலயத்திலிருந்து காவடி எடுத்துவந்து கோண்டாவில் மேற்குப் பிள்ளையார் கோவில் முன்றலில் நெருப்பின்மீது நடந்து பக்திபரவசமாக அரோகரா கோஷத்துடன் தீக்குளித்தார்.

## தலைமைஆசிரியர் நியமனம்

சாய்ந்தமருது, வியா

தலைமை ஆசிரியரின்றிப் பலவருடகாலமாக இயங்கி வந்த வாழைச்சேனை முஸ்லிம் பெண்கள் வித்தியாலயத்திற்கு ஏறாவூரைச் சேர்ந்த ஜனாப் சி. மருமுது லெவ்வை தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

0 0

ஊர்காவற்றுறை வியா

கருவில் றோமன் கத்தோலிக்க பாடசாலையின் தலைமை ஆசிரியராக கரம்பனைச் சேர்ந்த ஆசிரியர் திரு. இ. சந்தையா நியமனம் பெற்றுள்ளார்.

0 0

கோட்டை, வியா

கொழும்பு சென் ஜோசப் கல்லூரியின் அதிபராக இதுவரை கொழும்பு சென் பீட்டர்ஸ் கல்லூரி அதிபராகக் கடமையாற்றிய வண பிதா மோரிஸ் வீரக்கொடி நியமிக்கப்பட்டுள்ளார்,

கழுத்துறை பரிசுத்த சிலுவைக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றிய வண பிதா தியடோர் பீரிஸ் தற்போது சென்பீட்டர்ஸ் கல்லூரியின் அதிபராக நியமனம் பெற்றுள்ளார்.

—

## பனம்பழ 'ஜாம்'

பருத்தித்துறை, வியா

வடமராட்சி கிழக்கு காரியாதிகாரி பிரிவில் உள்ள மாதிரிக் கிராமசபையின் அம்பன் பகுதியில் பனம்பழத்திலிருந்து ஜாம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இது பலா ஜாமிலும் பார்க்க அதிக சுவையுள்ளதாயிருப்பதாகப் பாவனையாளர்கள் கூறுகின்றனர். அநேகமாக சிலநாட்களில் வடபகுதியில் உள்ள முக்கிய கடைகள் மூலம் இது விநியோகிக்கப்படலாமெனத் தெரிகிறது.

—

## கடனுதவி அதிகரிக்கப்படும்

கோட்டை, வியா

மீனவர்கள் வீடுகளை அமைத்துக் கொள்வதற்கு ஏற்றவகையில் கடன் உதவி 3,500 ரூபாவரை அதிகரிக்கப்படவுள்ளது. தற்போது மீனவர் குடும்பத்திற்கு 1,800 ரூபா மட்டுமே கடனாக வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

—

## ஒத்திவைப்பு

ஊரதீவு, வியா

புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் ஆலய உண்டியலை உடைத்துத் திருடியதாக நாகமுத்து இராசையா என்பவர்மீது ஊர்காவற்றுறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிபதி வழக்கை நவம்பர் மாதம் 6-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## 'தன்னலமற்ற சேவையாளன்'

சங்கானை, வியா

''இலங்கையின் எப்பகுதிக்கு இவர் சேவைக்கு அனுப்பப்பட்டாலும் எப்படிப்பட்ட மக்களுடனும் கலந்து தமது கடமையைச் செவ்வனே செய்யும் ஆற்றல் மிக்கவர். தன்னலம் அற்றுப் பணிபுரியும் இவர் இன்மேலும் பதவி உயர்வு பெற்று விளங்குவார் என்பதில் சந்தேகமில்லை''

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் அத்தியட்சஆதீனச் சங்கானைச் சபை ஊழியர் திரு ஜே எஸ் மார்க்கண்டுவுக்கு சங்கானை இந்து இளைஞர் சங்கத்தினர் அளித்த பிரிவுபசார வைபவத்திற்கு தலைமை தாங்கிப் பேசிய திரு எஸ் கே திருச்சிற்றம்பலம் குறிப்பிட்டார். சமாதான நீதவான் திரு ஏ ஈ இரத்தினசாமி, கு கனகரத்தினம் ஆகியோரும் உரையாற்றினர்.

புங்குடுதீவுச் சபைக்கு மாற்றலாகிச் செல்லும் இவருக்கு சங்கானை அத்தியட்ச ஆதீனச் சபையைச் சேர்ந்த சிறின்தவ மக்களும் பிரத்தியேக பிரிவுபசாரம் அளித்துக் கௌரவித்தனர். சங்கானைச்சபைக்கு மூளாய் சபையில் கடமையாற்றிய திரு ஜே. சி கனகரத்தினம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## கலை, கலாச்சாரப் பேரவை

ஊரதீவு, வியா

புங்குடுதீவு கலை கலாச்சாரப் பேரவையின் அங்குரார்ப்பணக் கூட்டம்புங்குடுதீவு கிராமசபை மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. கா. மதியாபரணம் தலைமையில் நடைபெற்ற போது பேரவைத் தலைவராக திரு மு தளையசிங்கமும் உபதலைவராக புலவர் ஈழத்துச் சிவானந்தனும் செயலாளராக க. செல்வரத்தினம் ஆசிரியரும் உப செயலாளராக திருமதி தி. இராஜேஸ்வரியும் பொருளாளராக கூ. வில்வரத்தினமும் உப பொருளாளராக திருமதி பி கலாநிதியும் தெரிவு செய்யப்பட்டனர்.

## பரு. துறைமுகத்துக்கு அரிசிக் கப்பல்

பருத்தித்துறை, வியா

'ஓஷன் என்றர் பிறைஸ்' என்ற பர்மா தேசக் கப்பல் 10,500 தொன் அரிசியுடன் பருத்தித்துறைக்கு வந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அநேகமாக இது நாளை துறைமுகத்தை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## கி. மு. சங்க நிர்வாகிகள்

சுழிபுரம், வியா

மூளாய் கிராம முன்னேற்றச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்க மண்டபத்தில் நடைபெற்றபோது புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு சி மயில்வாகனம், காரியதரிசி: திரு எம் கதிர்காமதம்பி, தனாதிகாரி: திரு இ தம்பையா.

## நிர்வாகிகள்

குப்பிளான், வியா

குப்பிளான் வரியிறுப்பாளர் சங்கத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம் திரு க வைரவநாதன் தலைமையில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் திரு க வைரவநாதன் திரு வீ பொன்னம்பலம் சங்கத்தின் காரியதரிசியாகவும் திரு மு செல்லையா தனாதிகாரியாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். ஒன்பது பேர்கொண்ட நிர்வாகக் குழுவும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டது.



செல்வி ஜெயந்தினி பூபாலசிங்கம் இவர் தான். ஆடற் கலைக்கு அழகூட்டப் பிறந்த புதிய ஈழத்து மலர் இது. அபிநயம்பிடிக்கும் அழகைப் பார்த்தாலே பரதக் கலைக்கு ஒளியும் மணமும் வீசும் புதிய மலர்தான் இதுஎன்று சொல்லத் தோன்றுகிறதல்லவா! செல்வி ஜெயந்தினியின் நாட்டிய அரங்கேற்றம் நாளை சனிக்கிழமை மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது. தமிழக அறிஞர் கி. வா. ஜகநாதன் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். பிரபல வர்த்தகரும் சமூக சேவையாளருமான திரு. எம். பூபாலசிங்கம் ஜே. பி.யின் மகளான செல்வி ஜெயந்தினி யாழ். பாரதி கலாமன்றத்தின் மாணவியும் திருமதி ஞானமணி செல்லையாவின் சிஷ்யையுமாவார்.

## யாழ். தமிழ் சங்கம்

ஞானடி, வியாழன்

''யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்'' என்ற பெயரில் சங்கம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சியை கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. ந. தருமலிங்கம் மேற்கொண்டுள்ளார். இச்சங்க அங்குரார்ப்பணக் கூட்டம், அடுத்தவாரம், கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது. தமிழ்ப் பிரமுகர்கள் பலர் இதில் கலந்துகொள்வார்களெனவும் தெரிய வருகிறது.

## 362 வது குலுக்கல்

கோட்டை, வியா

தேசிய லொத்தர்சபையின் கொள்ளுப்பிட்டியிலுள்ள அலுவலகத்தில் 362ம் இலக்க 50சத லொத்தர் சீட்டிழுப்பு இம்மாதம் 12ம் திகதி இடம்பெறவுள்ளது பரிசுபெறும் சீட்டுக்களை இம்மாதம் 13ம் திகதி தொடக்கம் ஆறுமாதங்களுக்கு கொழும்பு காலி றோட்டிலுள்ள தேசிய லொத்தர் சபைஅலுவலகத்தில் வேலை நேரத்தில் சமர்ப்பித்துப் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

## திருவிழா

கொழும்பு, வியாழன்

தெஹிவளையைச் சேர்ந்த தெதிமாலை அன்டர்சன் வீதியிலுள்ள ஸ்ரீமத் நாராயண சுவாமிகோவில் திருவிழா இம்மாதம் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது. அன்று பகல் மாகேசுவர பூசையும் இரவு சுவாமி வீதிவலம் வருதலும் இடம் பெறும்.

## இன்றைய பலன்

ஆவணி மாதம் 25-ம் திகதி (10-9-71)

மேஷம்: எதிலும் கலக்க நிலை தென்படும். நண்பர்களும் குறை கூறுவார்கள். பொருளாதார துறையில் மந்தநிலை தென்படுகின்றது.

ரிஷபம்: துண்டிக்கப்பட்ட தொடர்பு மீண்டும் துளிர்விடுவதற்கு இடமுண்டு இனிமையான பேச்சின் மூலம் மற்றவர்களை வசிகரிப்பீர்கள்.

மிதுனம்: இதயத்தில் ஏதோ மலை குமுறும் உல்லிவீட்டிலே உபத்திரவங்கள் அதிகரிக்கும். குழந்தை மேனின் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

கடகம்: காரியத்தில்வெற்றி கிடைக்கும், கவர்ச்சியான சம்பவங்களுக்கும் இடம் உண்டு. புதிய தொழிலில் அதிக ஈடுபாடு ஏற்படலாம்.

சிம்மம்: கடமையாற்றுமிடத்தில் சிறப்பான இடம் கிடைக்கும் புதிய கண்டுபிடிப்புக்களில் அதிக ஆர்வம் பிறக்கும் நல்ல நாள்.

கன்னி: பொறுப்புள்ளவிடயத்திற்கு இடமுண்டு கடமையாற்றுமிடத்தில் கன்னுவைப்பு வேலைகள் நடைபெறலாம். சிக்கலைத் தவிர்க்கவும்.

துலாம்: மகிமையான சம்பவம் நடைபெறும், களஸ்திர வழியால் நன்மைகள் கிடைக்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

விருச்சிகம்: கும்ச்சியின் உச்சக்கட்டம் வேதனையில் வீழ்த்திவிடும். ஆழ்ந்த சிந்தனையுடன் காரியத்தில் கவனம் வைப்பீர்.

தனுசு: கட்டி வெல்லம் போல இனிக்கும் வாழ்க்கை காதலர்கள் எண்ணங்கள் கைகூடும். இனபந்துக்களின் ஆதரவுகிடைக்கும்.

மகரம்: அறவழியை நாடுவீர்கள் தெய்வ [illegible] மேலோங்கிநிற்கும் [illegible] தில் சுமுகமானநிலை [illegible] டும்.

கும்பம்: பொருள் வரவில் புதிய திருப்பம் ஏற்படும் [illegible] முதலீட்டுச் செய்யும் தொழில் முன்னேற்றத்தைக் குறிப்பிடுகின்றது.

மீனம்: சிறியவிடயத்திற்குக் கூட அதிக ஆத்திரம் ஏற்படலாம், பணவழிகளிலும் பணம் செலவாகும் சிலர் இடப்பெயர்ச்சிக்கு இலக்காகலாம்.

ஜோதிடகலாநிதி

திருமலை க வேலுப்பிள்ளை

## உபதலைவராகத் தெரிவு



மானிப்பாய்க் கிராமசபையின் உபதலைவராக திரு. ம. யேசுரத்தினம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஆறும்வட்டார உறுப்பினராகத் தொடர்ந்து பல ஆண்டுகள் பதவி வகித்துவரும் இவர் மானிப்பாய் அன்னம்மாள் பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் உபதலைவராகவும் மானிப்பாய் அபிவிருத்தி மன்றத்தின் தலைவராகவும் சேவையாற்றுகிறார்.

## பருத்தித்துறை கொலை வழக்கு

# "2-ம் எதிரி றேடியோ வாங்கவேண்டும் என்றார்"

யாழ்ப்பாணம், வெள்ளி 2-ம் எதிரியை எனக்குத் தெரியும். நான் புத்தகம் வாங்க யாழ்ப்பாணம் சென்றபோது 2ம் எதிரி சந்தித்தார். அவர் றேடியோ ஒன்று வாங்க வேண்டுமென்றார். யாழ் சுலைமான்கண்டு றேடியோ கடையைத் தெரியும். நான் ஒரு றேடியோ வைத்திருக்கிறேன். 2ம் எதிரி அங்கு வந்தார்.

பருத்தித்துறை கொலை வழக்கில் சாட்சியமளித்த சயிக்கிள் கடை உரிமையாளரான நாகரத்தினம் நிரவியம் சாட்சியமளிக்கும் போது மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு வடமகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ எல் டி கிறெஸ்டர் முன்னிலையில் 10வது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

சுலைமான்கண்டு பிரதர்ஸ் மனேஜரான கிருஷ்ணன் சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில் அந்த றேடியோ என்ன விலைக்கு விற்றதென்று ஞாபகமில்லை என்று கூறினார்.

சிவசுப்பிரமணியம் பாஸ்கரன் சாட்சியமளிக்கையில் அந்த றேடியோ விற்பனை செய்யப்பட்டதென்றும் றிசீட்டில் விலை போடப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

தியாகராசா சண்முகசீலன் சாட்சியமளிக்கையில் இதேபோல் றேடியோவை நடராசாவிடம் 490 ரூபாவிற்கு வாங்கியதாகக் கூறினார்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் பேர்னாண்டோவும் சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் பருத்தித்துறையில் 68ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1ம் திகதிக்கும் 68ம் ஆண்டு நவம்பர் மாதம் 3ம் திகதிக்குமிடையில் முகமது கந்தான் முகதின் என்பவரைக் கொலை செய்ய ராமச்சந்திரன், நடராசா ஆகியோர் ஒன்று சேர்ந்து ஒரே நோக்குடன் சூழ்ச்சி செய்ததாகவும் அந்தச் சூழ்ச்சியினால் அவர் கொலை செய்யப்பட்டதாகவும் 68ம் ஆண்டு நவம்பர் மாதம் 2ம் திகதி ராமச்சந்திரன் என்பவர் முகமது கந்தான் முகதீனை கொலை செய்ததாகவும் அதே நேரம் அதே இடத்தில் நடராசா 1ம் எதிரிக்கு உதவியாக இருந்து இக்கொலைக்கு உடந்தையாக இருந்தாரென்றும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## பிள்ளைவரம் கேட்டு விரதமிருந்த மனைவியை

# கணவாய் சமைக்கும்படி கணவர் அடித்தார்

### மனைவி தற்கொலை

யாழ்ப்பாணம், வெள்ளி சந்நிதி கோவிலுக்கு நேர்த்திவைத்து பிள்ளைவரம் கேட்டு விரதமிருந்த தமது மனைவியை கணவாய்க்கறி சமைக்கும்படி வற்புறுத்தியதைத் தொடர்ந்து கணவனுக்கும் மனைவிக்குமிடையே எழுந்த சச்சரவைத்தொடர்ந்து மனைவி நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று உருத்திரபுரத்தில் நடைபெற்றது.

தங்கராசாவின் மனைவி பரமேஸ்வரி (வயது 24) என்பவரின் மரணவிசாரணையின் போது இது தெரியவந்தது. விரதமிருந்த மனைவியிடம் கணவாய்க்கறியை சமைக்கும்படி வற்புறுத்தி கணவர் அடித்ததாக விசாரணையில் தெரியவந்தது. கிளிநொச்சி மரணவிசாரணை அதிகாரி திரு யோகலிங்கம் ஜே பி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

# மனைவியை வெட்டிய கணவர் தற்கொலை

யாழ்ப்பாணம் வெள்ளி தமது மனைவியை கத்தியால் வெட்டிய கணவர், மனைவி இறந்துவிட்டதாகக் கருதி நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலைசெய்து கொண்ட சம்பவமொன்று தர்மபுரத்தில் நடைபெற்றுள்ளது.

மதுபோதையில் தமது வீட்டுக்கு வந்த வி என் பழனியாண்டி [வயது 40] என்பவர் சாப்பிடும்போது எழுந்த சச்சரவைத்தொடர்ந்து மனைவியை கத்தியால் வெட்டியதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள அப் பெண் உயிருடன் போராடிக்கொண்டிருக்கிறார்.

கிளிநொச்சி மரணவிசாரணை அதிகாரி திரு எம் யோகலிங்கம் கணவனின் மரணம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## கிழக்கு பாகிஸ்...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

முக்கிய இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது

திரு சுவர்ண்சிங் பண்டாரநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கியபொழுது கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு டி பி சுபசிங்க பாதுகாப்பு வெளிவிவகார உதவி அமைச்சர் திரு லக்ஷ்மன் ஜெயக்கொடி இலங்கைக்கான இந்தியத்தூதுவர் திரு வை கே பூரி பெருந்திரளான இந்திய வம்சாவழியினரும், தூதரகப் பிரதிநிதிகளும் அமைச்சரை வரவேற்றனர்.

திரு சுவர்ண்சிங் பிரயாணம் செய்த விமானத்தில் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் திரு என் டியூ டயஸ் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு எஸ் கே பானர்ஜி ஆகியோரும் வந்தனர்.

இந்திய வெளியுறவு அமைச்சர் சர்தார் சுவர்ண்சிங் மேற்கொண்டுள்ள இலங்கை விஜயத்துக்கான முக்கிய காரணங்களில் இலங்கையில் சீன செல்வாக்கைக் கட்டுப்படுத்த முயற்சிசெய்வதும் ஒன்று என ராஜதந்திர வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகின்றது.

பயங்கரவாத நடவடிக்கைகளின் பின்னர் சில வட்டாரங்களில் கருதப்படுவது போல் அவ்வளவுக்கு சீனாவின் செல்வாக்கு வளர்ந்திருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. இந்தியா செய்த உதவிகளை மிஞ்சிவிடும் அளவுக்கு செஞ்சீனா கணிசமான அளவு பொருளாதார உதவி கொடுத்திருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

(சி பி ஏ)

## இன்று நாடகவிழா

அச்சுவேலி, வெள்ளி அச்சுவேலி நாவலம்படி காட்டுமலை கந்தசுவாமி கோவில் தேர்முட்டி திருப்பணி நிதிக்காக மேற்படி ஆலய முன்றலில் இன்று வெள்ளிக்கிழமை இரவு நாடகவிழா இடம்பெறவிருக்கிறது. 1000க்கு மேற்பட்ட தடவைகள் மேடையேறி சாதனை புகழ்பெற்ற [illegible] வைரமுத்து கோஷ்டியினரின் 'மயான காண்டம்' பாஷையூர் வளர்பிறை நாடகமன்றத்தின் 'கண்டி அரசன்' ஆகிய இருநாடகங்களும் இடம்பெறும்.

## சீதனம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மரணமானவரின் தாயாரான ராஜேஸ்வரி சாட்சியமளித்தபோது கூறினார்.

கிளிநொச்சி மரணவிசாரணை அதிகாரி திரு எம் யோகலிங்கம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## சூ-என்-லாய்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லாய் 1964-ம் ஆண்டு கடைசியாக இலங்கைக்கு வந்தார் அந்தச் சமயத்தில் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் ஞாபகார்த்தமாக சர்வதேச மாநாட்டு மண்டபம் கட்டுவதற்கான உதவிகள் செய்வதாக அவர் வாக்குறுதியளித்துச் சென்றார். (சி பி ஏ)

## கண்ணனும்

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கை வேண்டாமென்றும் பாரதியார் கிருஷ்ணனை வேண்டுகின்றார்.

இதிலேயும் கிருஷ்ணனைப் பாரதியார் நின்று அர்ச்சுனன் ஆகிய சுதந்திரவீரர்களுக்குக் கூறுகிறார், 'வாடி மடையாதீர்! தொடர்ந்து போராடுங்கள்! நாங்கள் சரண்டும் ஆங்கிலப் புலிவர் கூட்டத்தையும் அவர்களுக்கு அனுசரணயாகவிருக்கும் தேசத்துரோகிகளையும் கொன்று விடுதலை பெறுவீர்' என்ற இதையும் நான் கூறவில்லை. அஹிம்சை போதித்த புத்தனைவரின் வந்துணர்த்தக் கூறிலேன். ஆகவே இது தருமமே என்ற தொனியும் பளிச்சிடுகிறது.

நனவு கண்ணன். கனவு நாடு விடுதலைபெற வேண்டுமென்பது. இவ்விரண்டும் 'ஆரிய தரிசனம்' என்ற பாரதியாரின் கவிதையில் ஐக்கியப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

## பயங்கர

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கைஎடுத்ததினால் நாட்டில் உள்நாட்டுக்கலகம்துவிர்க்கப்பட்டது என்றார்

மேலும் தொடர்ந்து பேசுகையில், பயங்கரவாத நடவடிக்கையை ஒட்டி 16,355 பேர் கைதுசெய்யப்பட்டு அதில் 1651 பேர் விடுதலை செய்யப்பட்டனர், இப்பொழுது 14204 பேர் சிறையில் இருக்கிறார்கள் அவசரகால சட்டத்தை ஒட்டி 148 அரசியல்வாதிகள் கைதுசெய்யப்பட்டனர் இதில் 19 பேர் முன்பே விடுதலைசெய்யப்பட்டனர் 39 பேர் விடுதலை செய்யப்படவுள்ளனர்

# ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி

### இ. வா. ஜ. மேசுவார்

யாழ்ப்பாணம், வெள்ளி நாளை சனிக்கிழமை மாலை தொடக்கம் நள்ளிரவுவரை வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது.

இவ்விழாவில் தமிழக அறிஞர் செந்தமிழ்ச் செல்வர் திரு. கி. வா. ஜகந்நாதனும் கலந்து கொண்டு 'கிருஷ்ண பரமாத்மா' என்னும் பொருள்பற்றிப் பேசுவார்.


## 30-வது மஹாஜன சம்பத சீட்டிழுப்பு

30-9-71ல் அநுராதபுரத்தில் நடைபெறும்

# விசேட பரிசுகள்

1-வது, 2-வது, 3-வது பரிசுபெறும் டிக்கெட்டுகளை உடையவர்களும், 200 ஆறுதல் பரிசு பெறும்டிக்கெட்டுகளை உரியவர்களும் தேசிய லொத்தர் சபைக்கு ரூபா 1000/- செலுத்தி ஒரு பட்டுக் கூறை சாறி அல்லது ரூபா 200/- செலுத்தி ஒரு தூய பட்டு மணிப்புரி சேலையைப் பெற்றுக் கொள்ளலாம். "இவை முதல் வருபவருக்கு முதல்தருவது" என்ற அடிப்படையில் வழங்கப்படும்.

ரொக்கப்பரிசுபெறும் 203 டிக்கெட்டுகளுக்குடன் முன்னுக்குவரும் நான்கு டிக்கட்டுகளுக்கும் உடன் அடுத்துவரும் நான்கு டிக்கெட்டுகளுக்கும் (ரொக்கப் பரிசுபெறும் 203 டிக்கெட்டுகள் தவிர) உரியவர்கள் தேசிய லொத்தர்சபைக்கு ரூபா 65/- செலுத்தி ஒரு ஹக்கோபா சில்க் சாறி அல்லது ரூபா 60/- செலுத்தி ஒரு இறக்குமதிசெய்த அச்சடி நைலெக்ஸ் சாறி அல்லது ரூபா 45/- செலுத்தி ஒரு ஆர்க் சில்க் சாறி பரிசாகப் பெற்றுக் கொள்ளலாம். இவை 'முதல் வருபவருக்கு முதல் தருவது' என்ற அடிப்படையில் வழங்கப்படும்.

பரிசு பெறும் டிக்கெட்டுகள் உட்பட, ரொக்கப் பரிசு பெறவுள்ள கடைசி 100 டிக்கெட்டுகளுக்கு உரியவர்கள் தேசிய லொத்தர்சபைக்கு ரூபா 300/-க்கு மேற்படாமல் செலுத்தி ஒரு சகம் குறிப்பிடப்படாத அலங்காரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ரொக்கப்பரிசு பெறும் 203 டிக்கெட்டுகள் உள்ளடங்கிய, 100 டிக்கெட்டுகளுக்குரியவர்களுக்கு (ரொக்கப்பரிசுபெறும் 203 டிக்கெட்டுகள், ரொக்கப்பரிசு பெறும் ஒவ்வொரு டிக்கெட்டுகளுக்கும் முதல் வரும் நான்கு டிக்கெட்டுகள், அடுத்து வரும் நான்கு டிக்கெட்டுகள் தவிர) பின்வருவனவற்றில் ஒன்று பரிசாகக் கிடைக்கும்.

ரூபா 30/-க்கு ஒரு டக்கா கொட்டன் சாறி
ரூபா 15/-க்கு ஒரு கொட்டன் சாறி
ரூபா 20/-க்கு ஒரு சாரம்
ரூபா 18/-க்கு ஒரு சாரம்
ரூபா 42/-க்கு சால்வையுடன் ஆர்ட் சில்க்வேட்டி
ரூபா 30/-க்கு சால்வையின்றி ஆர்ட் சில்க்வேட்டி
ரூபா 15/-க்கு சால்வையின்றி பருத்தி வேட்டி
ரூபா 35/-க்கு 7 யார் எகிப்தியன் கொட்டன் சூட்டிங்ஸ்

குறிப்பிட்ட அளவு கையிருப்பே உள்ளதால் இவ்விசேஷ பரிசுகள் "முதல் வருபவருக்கு முதல் தருவது" என்ற அடிப்படையில் 1971 அக்டோபர் 14-ம்திகதிமுதல் 1971 அக்டோபர் 16-ம் திகதி வரைவேலைநேரங்களில் இலக்க அடையாளச்சின்னங்கள் கொடுப்பதன் மூலம் வழங்கப்படும் ஒருவர் ஒருநேரத்தில் ஒரு டிக்கட்டையே கையளிக்கமுடியும்.

விசேட பரிசுகளுக்குரிய கோரிக்கைகள் கீழ்க்காணும் தேசிய லொத்தர்சபையின் கிளை அலுவலகங்களிலும் ஏற்றுக்கொள்ளப்படும்:

1. இல. 113, பொதுச்சந்தைக் கட்டிடம், புதிய நகரம், அநுராதபுரம்
2. இல. 66 & 68. பஜார் வீதி, பதுளை
3. இல. 131, கொட்டுகொடல்ல வீதி, கண்டி
4. இல. 10, புத்தளம் றோட், குருநாகல்
5. இல. 23, திருகோணமலைவீதி, மட்டக்களப்பு
6. இல. 23. மணிக்கூட்டுவீதி. யாழ்ப்பாணம்
7. இல. 2, காமினி மாவத்த காலி
8. ஹேமச்சந்திரா கட்டிடம், புரோட்வே ரோட், மாத்தறை
9. இல. 56F, பண்டாரநாயக்க மாவத்த, இரத்தினபுரி

விசேட பரிசாகப்பெறும் பொருட்களை அவை பெறும் இடத்திலேயே பரிசீலித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். ஏதாவது சேதம் அல்லது பழுதிருப்பின் அவற்றை உடனே திருப்பிக்கொடுத்துவிடவும். எடுத்துச்செல்லப்பட்ட பொருட்கள் பின்னர் திருப்பி எம்மால் ஏற்கப்படமாட்டா. பெறுமிடத்திலிருந்து எடுத்துச் சென்றபின் பொருட்களில் ஏதாவது பழுது அல்லது சேதம் இருப்பின் அவற்றிற்கு நாம்பொறுப்பாளிகளல்ல.

# தேசிய லொத்தர் சபை

